பாடம் 6

பெப்ரவரி 3-9

நான் எழுந்தருளுவேன்

ஓய்வுநாள் பிற்பகல்

இவ்வார ஆராய்ச்சிக்கு: சங் 18:3–18; சங் 41:1–3; உபா 15:7–11; சங்கீதம் 82; சங் 96:6–10; சங் 99:1–4; ரோமர் 8:34.

மனன வசனம்: "ஏழைகள் பாழாக்கப்பட்டதினிமித்தமும், எளியவர்கள் விடும் பெருமூச்சி னிமித்தமும், நான் இப்பொழுது எழுந்து, அவன்மேல் சீறுகிறவர்களுக்கு அவனைக் காத்துச் சுகமாயிருக்கப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்". சங் 12:5.

தீமை, அநீதி, ஒடுக்கி பாழாக்குதல் போன்றவை நம் காலத்திற்கு மட்டும் உரியவை அல்ல. சங்கீதக்காரனும் அப்படிப்பட்ட காலத்தில்தான் வாழ்ந்தார். எனவே இன்றைய உலகம், சங்கீதக்காரன் வாழ்ந்த உலகம் என ஒட்டுமொத்த உலகத்தில் அத்தகைய வன்முறை மற்றும் ஒடுக்குதலை தேவன் எதிர்ப்பதை பற்றியும் சங்கீதங்கள் பேசுகின்றன.

ஆனாலும் தேவன் நீடிய பொறுமையுள்ளவர்; நீடிய பொறுமையோடே தம் கோபத்தை தாமதித்து, ஒருவரும் கெட்டுப்போகாமல் மனந்திரும்பி, தங்கள் வழிகளை மாற்றிக் கொள்ள காத்துக்கொண்டிருக்கிறார். 2பேதுரு 3:9-15. ஆனால் மனிதர்கள் எதிர்பார்க்கிற நேரத்தில் தேவன் செயல்படுவதில்லை என்றாலும், தேவன் நியாயத்தீர்ப்புக் கொடுக்கப்போகிற நாள் வருகிறது என்பதுதான் உண்மை. சங் 96:13; சங் 98:9. அந்த நாள் வருமட்டும் நாம் அவரையும் அவரது வாக்குறுதிகளையும் நம்பவேண்டும்.

நீதியையும் நியாயத்தையும் தம் சிங்காசனத்தின் ஆதாரமாகக் கொண்ட சிருஷ்டிகர் மட்டுமே (சங் 89:14; சங் 97:2) எல்லாருக்கும் மேலான அரசராக தம் நியாயத்தீர்ப்பால் உலகத்தை நிலைப்படுத்தி, செழிக்கச் செய்ய முடியும். தேவனுடைய நியாயத்தீர்ப்பு இருமடிப்பு அம்சமுள்ளது; ஒடுக்கப்பட்டோரை விடுவிப்பதும், துன்மார்க்கரை அழிப்பதும் அதில் அடங்கும். சங் 7:6-17.

இதுதான் நமக்கு வாக்களிக்கப்பட்டுள்ளது; இதுவே ஒருநாளில் நிகழப்போகிறது; ஆனாலும் இது நாம் எதிர்பார்க்கிற நேரத்தில் அல்ல, தேவனுக்கு உகந்த நேரத்தில் நடக்கும். அதையே சங்கீதக்காரன் வலியுறுத்துகிறார்.

2024 பெப்ரவரி 10 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

மகத்துவமான வீரர்

பின்வரும் வசனங்களில் கர்த்தர் எவ்வாறு சித்திரிக்கப்படுகிறார்? தம் மக்களை இரட்சிக்க தேவன் ஆயத்தமாக இருப்பதுபற்றி இந்த உருவகங்கள் தெரிவிப்பது என்ன? சங்கீதம் 18:3-18; சங்கீதம் 76:3–9, 12; சங்கீதம் 144:5-7.

தம் மக்களை அச்சுறுத்துகிற தீய ஆற்றல்களுக்கு எதிராக தேவன் மகத்துவ வல்லமை உடையவராக இருப்பதால் இந்தத் துதிப்பாடல்கள் அவரைப் போற்றுகின்றன. வீரராகவும் நியாயாதிபதியாகவும் விளங்குகிற தேவனுடைய மகத்துவத்தைச் சித்திரிக்கின்றன. தேவனை பராக்கிரம வீரராக சங்கீதங்கள் பல இடங்களில் சித்திரிக்கின்றன; தம் மக்களின் கதறல்களுக்கும் பாடுகளுக்கும் அவர் எவ்வளவு துரிதமாகப் பதிலளிக்கிறார் என்பதை வலியுறுத்துகின்றன.

'கர்த்தர் வானங்களிலே குமுறினார், உன்னதமானவர் தமது சத்தத்தைத் தொனிக்கப்பண்ணினார்; கல்மழையும் நெருப்புத்தழலும் விழுந்தது. தம்முடைய அம்புகளை எய்து, அவர்களைச் சிதறடித்தார்; மின்னல்களைப் பிரயோகித்து, அவர்களைக் கலங்கப்பண்ணினார். அப்பொழுது கர்த்தாவே, உம்முடைய கண்டிதத்தினாலும் உம்முடைய நாசியின் சுவாசக்காற்றினாலும் தண்ணீர்களின் மதகுகள் திறவுண்டு, பூதலத்தின் அஸ்திபாரங்கள் காணப்பட்டது'. சங் 18:13-15.

உறுதியான தீர்மானத்தோடும் தீவிரத்தோடும் தேவன் செயல்படுகிறார்; எனவே பாடனுபவிப்பர்கள் மீது அவருக்கிருக்கிற அக்கறை பற்றியும் அல்லது தீமையைத் தோற்கடிக்க அவருக்குள்ள திறமைபற்றியும் சந்தேகமே எழக்கூடாது. அவர் செயல்படும் வரைக்கும் காத்திருப்பதே நம் வேலை.

தாவீது போன்ற தேவபிள்ளைகள் போரில் ஈடுபட்டிருக்கிறார்கள்; ஆனாலும் வெற்றி மனிதர்களால் வரவில்லை. தேவ மக்களின் எதிரிகளுக்கு எதிரான போர்கள் பலவற்றில், அனைத்து வெற்றிகளுக்கும் தேவன் மட்டுமே காரணர் என்று தாவீது ராஜா தேவனைப் புகழுகிறார். தன்னுடைய பெலத்தின் ஆதாரம் யாரென்பதை தாவீது அறிந்திருந்தார்.

தன்னுடைய கரங்களை தேவனே யுத்தத்திற்குப் பழக்குவதாக தாவீது சொன்னாலும் (சங் 18:34), தன் போர்த்திறன்களில் தான் நம்பிக்கை வைத்ததாக சங்கீதங்களில் எங்குமே சொல்லவில்லை. மாறாக கர்த்தர் தாவீதுக்காக யுத்தம் செய்து, அவரை விடுவிக்கிறார். சங் 18:47,48.

வெற்றி வீரன் என்று அறியப்பட்ட தாவீது ராஜா, சங்கீதங்களில், தன்னை திறமையான ஒரு இசைக்கலைஞனாகப் பாவித்து, தேவன் மட்டுமே தம் மக்களை விடுவிப்பவர், பராமரிப்பவர் என்று அவரைப் போற்றுகிறார். சங் 144:10-15. கர்த்தரைத் துதிப்பதும், அவரிடம் வேண்டுவதுமே தாவீதின் பெலத்திற்கான ஆதாரங்கள்; தேவன் மட்டுமே நம்புவதற்கும் தொழுவதற்கும தகுந்தவர்.

வாழ்க்கையில் நீங்கள் பெற்றிருக்கிற வரங்களும், வெற்றிகளும் பல இருக்கலாம்; ஆனால் அவற்றின் ஆதாரமானவரை எப்போதும் நினைவில் வைப்பது ஏன் அவசியம்? ஆதாரத்தை மறந்தால் என்ன ஆபத்தைச் சந்திக்க நேரிடும்?

ஒடுக்கப்பட்டோருக்கு நியாயம்

சங்கீதம் 9:18; 12:5; 40:17; 113:7; 146:6-10; 41:1-3 இன் செய்தி என்ன?

ஏழைகள், தரித்திரர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், கணவன் அல்லது மனைவியை இழந்தவர்கள், அந்நியர்கள் உள்ளிட்ட எளிதில் பாதிக்கப்படக் கூடிய மக்களுக்கு நியாயம் கிடைப்பதில் தேவன் விசேஷித்த கவனமும் அக்கறையும் காட்டுகிறார். சாட்சியாகமங்கள் மற்றும் தீர்க்கதரிசனங்கள் போன்று சங்கீதங்களும் அந்தக் கருத்தை வலியுறுத்துகின்றன. யாத் 22:21-27; ஏசா. 3:13-15.

'ஏழைகள் மற்றும் தரித்திரர்' எனும் வார்த்தைகள் பல சங்கீதங்களில் வருகின்றன; ஒடுக்கப்பட்டவர்களை மத, தேசிய அடையாளங்களால் குறிப்பிடவே இல்லை. பிரபஞ்சம் முழுவதிலுமுள்ள மனிதர்கள் மேல் தேவன் அக்கறை காட்டுவதை இது வலியுறுத்துகிறது. 'ஏழைகளும் தரித்திரரும்' பொருள்ரீதியான வறுமையில்தான் இருக்க வேண்டும் என்றில்லை, எளிதில் பாதிக்கப்படுகிற, உதவியற்ற நிலையில் இருப்பதையும் காட்டுவதாகும்.

அவர்களுக்கு தேவனுடைய மனதுருக்கம் தேவைப்படும்; தேவனுடைய உதவியை மட்டுமே நம்பி, வேறுவழியில்லாமல் இருப்பார்கள். 'ஏழைகள், தரித்திரர்' என்று தேவன்மீது மெய்ப்பற்றும், உண்மையும், அன்பும் வைத்திருப்பவர்களைப் பற்றியும் சொல்லப்படுகிறது; தாங்கள் முற்றிலும் தேவனைச் சார்ந்திருப்பதை அறிக்கையிடுவார்கள்; கொஞ்சங்கூட சுயத்தின்மேல் நம்பிக்கையும் நிச்சயமும் வைக்கிறவர்களாக இருக்கமாட்டார்கள்.

சிறுமைப்பட்டவர்கள்மேல் அக்கறை காட்டுவது, தேவனுக்கு உண்மையாக இருப்பதைக் காட்டுகிறது. சங் 41:1-3. வேதாகமத்தைப் பொறுத்தவரை, எளிதில் பாதிக்கப்படுகிற நிலையில் இருப்பவர்களுக்கு எதிரான பாவம் கொடியதாகக் கருதப்படுகிறது. உபா 15:7-11. தேவமக்கள் ஒவ்வொரு வகை ஒடுக்குதல்களுக்கும் எதிராக குரல் எழுப்பும்படி சங்கீதங்கள் ஊக்குவிக்கின்றன.

அழிந்துபோகிற மனித உபாயங்களை ஞானத்திற்கும் பாதுகாப்பிற்கும் ஆதாரமாக நம்புவது வீணானது என்பதையும் சங்கீதங்கள் வலியுறுத்துகின்றன. குறிப்பாக தேவனுடைய வழிகளுக்கு எதிராக இருக்கிற மனித தலைவர்களிலும் நிறுவனங்களிலும் இரட்சிப்புக்காக நம்பிக்கை வைப்பதற்கும் ஏற்படுகிற தூண்டுதலை தேவமக்கள் விரட்டியடிக்கவேண்டும்.

நம் கர்த்தர் தம் கிருபையால், தம் தரித்திரத்தின் நிமித்தம் அநேகர் ஐசுவரியவான்களாகும்படிக்கு ஓர் ஏழையாக வந்து, ஏழைகளின் பங்காளியானார். 2கொரி 8:9. கிறிஸ்துவின் ஐசுவரியங்களில், பாவத்தால் உண்டான ஒவ்வொரு வகையான ஒடுக்குதல்களிலுமிருந்து கிடைக்கிற விடுதலையும் அடங்கும்; மேலும், தேவனுடைய ராஜ்யத்தில் நித்திய ஜீவனையும் அவர் வாக்குரைக்கிறார். வெளி 21:4. தேவனே நியாயாதிபதி எனும் சங்கீதங்களின் வாக்குறுதிகளை இயேசு கிறிஸ்து நிறைவேற்றுகிறார்; சிறுமைப்பட்டவர்களுக்கு நேர்ந்த ஒவ்வொரு அநியாயத்தையும், அவர்களுக்குச் செய்யத்தவறிய கடமையையும் அவர் நியாயந்தீர்ப்பார். மத் 25:31-46.

நம் மத்தியில் உள்ள 'ஏழைகள், தரித்திரர்கள்' பற்றி எவ்வளவு தூரம் யோசிக்கிறோம், எவ்வளவு அதிகமாகச் செய்கிறோம்?

எதுவரைக்கும் அநியாயத்தீர்ப்பு செய்வீர்கள்?

இஸ்ரவேலில் நியாயத்தைப் பராமரிக்கும்படி இஸ்ரவேலின் தலைவர்களுக்கு தேவன் அதிகாரத்தைக் கொடுத்தார். சங் 72:1-7,12-14. இஸ்ரவேலின் ராஜாக்கள் தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக அதிகாரம் செலுத்த வேண்டியிருந்தது. சமாதானத்தை உறுதி செய்வதும், சமுதாய ரீதியாக பின்தங்கியவர்களைக் கவனிப்பதுமே தலைவர்களின் முக்கிய வேலையாக இருக்க வேண்டும். அப்போதுதான் தேசம் செழிக்கமுடியும். ராஜாவின் சிங்காசனம் மனித வல்லமையால் அல்ல, தேவனுக்கு உண்மையாக இருப்பதாலேயே பெலப்படுகிறது.

தலைவர்கள் நியாயத்தைப் புரட்டி, தாங்கள் பாதுகாக்கவேண்டிய மக்களை ஒடுக்கும்போது என்ன நடக்கிறது? சங்கீதம் 82.

சங்கீதம் 82இல், இஸ்ரவேலின் சீர்கெட்ட நியாயாதிபதிகளுக்கு எதிராக தேவன் நியாயத்தீர்ப்புகளை வழங்குகிறார். சங் 82:1,2 இல் 'தேவர்கள்' என்று அஞ்ஞான கடவுள்களையோ தூதர்களையோ சொல்லவில்லை; ஏனென்றால் தேவ மக்களுக்கு நியாயம் வழங்குகிற வேலை அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை; அதை நிறைவேற்றாததற்காக அவர்களை தேவன் நியாயந்தீர்க்கவில்லை. டோரா சட்டங்களின் அடிப்படையில்தான் சங் 82:2,4இல் குற்றச்சாட்டுகள் வைக்கப்படுகின்றன. எனவே 'தேவர்கள்' என்பது இஸ்ரவேலின் தலைவர்கள் என்பது புரிகிறது. உபா 1:16-18; உபா 16:18-20; யோவான் 10:33-35. நியாயமாக நியாயந்தீர்க்கிறீர்களா என்று 'மனுபுத்திரர்களிடம்' தேவன் கேட்கிறார்; அவர்கள் அநீதியுள்ளவர்களாகக் காணப்பட்டதால், அவர்களுக்கு தண்டனை தீர்ப்பு வழங்குகிறார். தலைவர்கள் ஒளியாகிய தேவ பிரமாணத்தை விட்டுவிட்டதால் (சங் 119:105), அறிவில்லாமல் அந்தகாரத்தில் தடுமாறுகிறார்கள். சங் 82:5.

கர்த்தர் மட்டுமே தேவன் என்று வேதாகமம் சந்தேகத்திற்கு இடமின்றி சொல்லுகிறது. தேவன் தம்முடைய பிரதிநிதிகளாக நியமித்த மனித தலைவர்களை தம்மோடு சேர்ந்து உலகத்தை ஆளுகை செய்ய வைக்கிறார். ரோமர் 13:1. ஆனாலும் வரலாற்றிலும் இப்போதும், இந்த மனித பிரதிநிதிகள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பை எவ்வளவுக்கு தவறாகப் பயன்படுத்துகிறார்கள்?

மற்றவர்களுக்கு மேலாக தங்களை 'தேவர்களாக' கருதின சில தலைவர்களின் தேவதுரோகத்தை சங்கீதம் 82 பரிகாசமாக வெளிப்படுத்திக் காட்டுகிறது. இஸ்ரவேலின் தலைவர்களுக்கு தேவன் அதிகாரத்தையும், 'உன்னதமானவரின் மக்கள்' என்று அழைக்கப்படுகிற சிலாக்கியத்தையும் தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற வாய்ப்பையும் கொடுத்தாலும், துன்மார்க்க தலைவர்களை தேவன் புறக்கணிக்கிறார். அவர்கள் மனிதர்கள் என்றும், எல்லாரையும் போலவே ஒழுக்க விதிகளுக்கு உட்பட்டவர்கள் என்றும் நினைவூட்டுகிறார். எவரும் தேவனுடைய பிரமாணத்திற்கு மேற்பட்டவர் அல்ல. சங் 82:6-8.

உலகம் முழுவதையும் தேவன் நியாயந்தீர்ப்பார்; தேவமக்களும்கூட தேவனுக்குக் கணக்குக் கொடுக்கவேண்டும்.

மற்றவர்கள் மேல் என்னவகை அதிகாரத்தைப் பெற்றிருக்கிறீர்கள்? அந்த அதிகாரத்தை எவ்வளவு நீதியோடும் நியாயத்தோடும் செயல்படுத்துகிறீர்கள்? கவனமாகப் பதிலளியுங்கள்.

உம்முடைய உக்கிரத்தை அவர்கள்மேல் ஊற்றும்

நியாயத்தீர்ப்பின் முகவ ராக யாரைக் காட்டுகின்றன? சங்கீதம் 58:6-8; சங்கீதம் 69:22-28; சங்கீதம் 83:9-17; சங்கீதம் 94:1, 2; சங்கீதம் 137:7-9.

சங்கீதக்காரர்கள் தங்களுக்கோ தங்கள் மக்களுக்கோ கேடுசெய்த மனிதர்களை அல்லது தேசங்களை தேவன் பழி வாங்கவேண்டும் என்று வேண்டுகிறார்கள். அதற்கு சில கடின மான வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள். அது சற்றே குழப்பமாகத் தெரிய லாம்; எதிரிகளை நேசிக்கவேண்டும் என்கிற வேதாகம நியதிகளுக்கு முரணாக இருக்கலாம். மத் 5:44.

ஆனாலும் ஒடுக்கப்படும்போது சங்கீதக்காரனிடம் காணப்படுகிற கோபம் நியாயமானதுதான். மற்ற அநேகரைவிட சங்கீதக்காரர்கள் எது சரி, எது தவறு என்பதில் அதிக கவனம் செலுத்தினார்கள். தங்களுக்கு மட்டுமல்ல மற்றவர்களுக்கும் செய்யப்படுகிற தீமைகள் குறித்து அதிக அக்கறை காட்டுகிறார்கள்.

ஆனாலும் பழிவாங்கும் முகவராக தான் இருப்பதாக சங்கீதங்களில் எந்த இடத்திலும் சங்கீதக்காரன் குறிப்பிடவில்லை. மாறாக, பழிவாங்குவதை தேவனுடைய கரத்தில் மட்டுமே விட்டுவிடுகிறார். தேவன் உடன்படிக்கையில் சொல்லிய சாபங்களை சங்கீதங்கள் நினைவூட்டி (உபா 27:9-16), தேவன் தாம் வாக்குரைத்தபடி செயல்பட வேண்டுகின்றன.

சங்கீதங்கள் சங்கீதக்காரனின் ஜெபங்கள் மட்டுமல்ல, அவை தேவனுடைய நியாயத்தீர்ப்பு நெருங்கியிருப்பதை அறிவிக்கிற தீர்க்கதரிசனங்கள். சங்கீதம் 137, பாபிலோன் மீதான தேவனுடைய தீர்ப்புபற்றி தீர்க்கதரிசிகள் சொல்லியவற்றை நினைவுப்படுத்துகிறது. பிற தேசங்களுக்கு பாபிலோன் ஏற்படுத்திய அழிவு திரும்ப அதன்மீதே திரும்பவிருந்தது. தீமைக்கு தண்டனை கிடைக்காமல் இருப்பது எப்போதும் நடக்காது என்கிற தெய்வீக எச்சரிப்புகளை சங்கீதங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

தேவன் நியாயத்தோடும் கிருபையோடும் பதில்செய்வார். தங்களை அநீதியாக நடத்தினவர்களுக்காக ஜெபிக்கவும், அவர்கள் மனந்திருந்த எதிர்பார்க்கவும் தேவ பிள்ளைகள் அழைக்கப்பட்டுள்ளார்கள். சங் 83:18; எரே 29:7.

ஆனாலும், சத்துருக்களை சிநேகிக்கவேண்டும் என்கிற வேதாகம நியதிக்குள் சங்கீதங்களை அடக்கிப் பார்க்க முயற்சிக்கும்போது, அவற்றில் வெளிப்படுகிற வியாகுலமான அனுபவத்தைக் குறைத்துப்பார்க்க முயலக்கூடாது. தம் பிள்ளைகளின் உபத்திரவங்களை தேவன் அங்கீகரிக்கிறார்; ‘கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது’ என்று அவர்களுக்கு உறுதியளிக்கிறார். சங் 116:15. தேவன் நியாயத்தீர்ப்பு வழங்கப்போவதால், சகல தீமைகளுக்கும் எதிராகக் குரல்கொடுக்கவும், பரிபூரணத்தோடு வரப்போகிற தேவனுடைய ராஜ்யத்தை நாடவும் கடமைப்பட்டிருக்கிறோம். பாடுபடுபவர்களுக்காக சங்கீதம் குரல்கொடுக்கிறது;

தங்களுக்கோ தங்களுக்கு பிரியமானவர்களுக்கோ கடும் தீமை செய்த வர்களை பழிவாங்குவது பற்றி சிலசமயங்களில் யாருக்குத்தான் யோசனை வராமல் இல்லை? அத்தகைய உணர்வுகளை சரியான கண்ணோட்டத்தில் அணுக இந்தச் சங்கீதகங்கள் எவ்வாறு உதவலாம்?

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பும் பரிசுத்த ஸ்தலமும்

தேவனுடைய நியாயத்தீர்ப்பு எங்கே நடக்கிறது? இதற்கான பதிலில் நமக்குள்ள கருத்துகள் என்ன? தீமையை தேவன் அணுகப்போகிற விதம்பற்றி அறிந்துகொள்ள பரிசுத்த ஸ்தலம் எவ்வாறு உதவுகிறது? சங்கீதம் 96:6-10; சங்கீதம் 99:1-4; சங்கீதம் 132:7-9, 13-18.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு பரிசுத்த ஸ்தலத்துடன் நெருங்கிய தொடர்புடையது. தீமைகுறித்து சங்கீதக்காரனுக்கு இருந்த குழப்பங்கள் பரிசுத்த ஸ்தலத்தில்தான் தீர்ந்தன. சங் 73:17-20. ஊரீமும் (எண் 27:21) நியாயவிதி மார்ப்பதக்கமும் (யாத் 28:15,28-30) சுட்டிக்காட்டியதுபோல, தேவனுடைய நியாயத்தீர்ப்பு நடக்கிற இடமாக பரிசுத்த ஸ்தலம் சுட்டிக்காட்டப்படுகிறது. எண் 27:21. அதன்படி, சங்கீதங்கள் பல பரிசுத்த ஸ்தலத்தில் தேவன் தம் சிங்காசனத்தில் இருப்பதாகவும், பாவத்தையும் தீமையையும் குறித்து உலகத்தை நியாயந்தீர்க்கப் போவதாகவும் சொல்லுகிறார்கள்.

ஆசரிப்புக்கூடாரத்தில், இரட்சிப்பின் திட்டம் வெளிப்படுத்தப்பட்டது. அஞ்ஞான மார்க்கத்தில், பாவத்தை மந்திர சடங்குகளால் அகற்றவேண்டிய சரீரப்பிரகாரமான கறையெனக் கருதினார்கள். மாறாக, தேவனுடைய ஒழுக்கப்பிரமாணத்தை மீறுவது பாவமென வேதாகமம் சொல்லுகிறது. தேவனுடைய பரிசுத்தத்திற்கு காரணம் அவர் நியாயத்தையும் நீதியையும் விரும்புவதுதான். அதுபோல, தேவமக்கள் நியாயத்தையும் நீதியையும் தேடவேண்டும்; தேவனை அவருடைய பரிசுத்த அலங்காரத்துடன் தொழவேண்டும். அதற்கு அவர்கள் அவருடைய பரிசுத்தத்தின் வெளிப்பாடான அவரது பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும்.

எனவே, பரிசுத்தஸ்தலானது பாவத்தை மன்னிக்கிற இடமாகவும், தேவ சிங்காசனத்தின் கிருபாசனமும் 'நீதியின் பலிகளும்' (உபா 33:19; சங் 4:5) சுட்டிக்காட்டியதுபோல நீதி நிலைநிறுத்தப்படுகிற இடமாகவும் இருக்கிறது.

ஆனாலும் 'மன்னிக்கிற தேவனானவர்' மனந்திருந்தாதவர்களின் துன்மார்க்க செய்கைகளுக்காக அவர்களைப் பழிவாங்குகிறார். சங் 99:8. பரிசுத்த ஸ்தலம்தான் தேவனுடைய நியாயத்தீர்ப்பு நடக்கிற இடம் என்பதில் அவருடைய பரிசுத்தம் குறித்து எப்போதும் விழிப்புடன் இருக்கவேண்டும், தேவனுடைய உடன்படிக்கை நிபந்தனைகளின்படி நீதியாக வாழவேண்டும் என்கிற நடைமுறை கருத்துகள் அடங்கியுள்ளன.

சீயோனிலிருந்து கர்த்தர் நியாயத்தீர்ப்பு வழங்குவது நீதிமான்கள் நலமாக வாழவும், துன்மார்க்கர் தோற்கடிக்கப்படவும் உதவுகிறது. சங் 132:13-18. கர்த்தர் நியாயாதிபதியாக வரப்போகிறார் என்கிற மகிழ்ச்சியான எதிர்பார்ப்பை, குறிப்பாக பாவநிவாரண நாளில் பரிசுத்த ஸ்தலம் வளர்த்தது. அதுபோல, தெய்வீக நியாயாதிபதியாகிய (சங் 96:13; சங் 98:9) இயேசு கிறிஸ்து, பரலோகப் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து சீக்கிரத்தில் வரப்போவது குறித்த நிச்சயத்தை (வெளி 11:15-19) சங்கீதங்கள் வலுவாக்குகின்றன.

பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தில் கிறிஸ்து செய்கிற ஊழியம் அவருடைய மக்களுக்கு நற்செய்தி எனபதை ரோமர் 8:34 எவ்வாறு காட்டுகிறது?

மேலும் படிக்க:

சங்கீதங்கள், அநியாயம் குறித்து மனிதர்கள் அக்கறையற்று இருப்பதை எதிர்க்கின்றன; தீமையை அங்கீகரிக்க மறுக்கின்றன. பழிவாங்குகிற ஆசையால் அல்ல, தேவ நாமத்தின் மகிமை மேலான வைராக்கியத்தால் பேசுகின்றன. எனவே, தீமைக்கு தேவன் பழிவாங்கும்போது நீதிமான்கள் களிகூருவது நியாயமே; ஏனென்றால், அதன் மூலம் உலகத்தில் தேவனுடைய நாமமும் அவரது நியாயமும் நிலைநாட்டப்படுகின்றன. சங் 58:10,11. மனிதர்கள் தீமைக்கு எதிராகக் குரல் கொடுப்பதும், பரிபூரணத்தோடு வரப்போகிற தேவராஜ்யத்தை நாடுவதும் அவர்களது கடமையென சங்கீதங்கள் கூறுகின்றன. சங்கீதங்களில், தெய்வீக ஆறுதல், விடுதலை குறித்த நிச்சயம் கொடுக்கப்பட்டுள்ளது. கர்த்தர் எழுந்தருளுவார்!

"'என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்' என்று இயேசு சொல்லுகிறார். மேலும், கர்த்தருடைய நாமத்தினால் பேசின தீர்க்கதரிசிகளை 'துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக' சுட்டிக்காட்டினார். யாக்கோபு 5:10. ஆதாமின் பிள்ளைகளில் முதல் கிறிஸ்தவரான ஆபேல் இரத்தசாட்சியாக மரித்தார். ஏனோக்கு தேவனோடு நடந்தார், உலகம் அவரை அறியவில்லை. நோவாவை மதத்தீவிரவாதி, வீண் பீதியைக் கிளப்புவர் என்று கேலிசெய்தார்கள். 'வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள்.' 'வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்.' எபிரெயர் 11:36,35".1

கலந்துரையாடக் கேள்விகள்

1. *உலகத்தில் காணப்படுகிற தீமையைக் கண்டு வேதனைப்படுகிறவர்கள், உண்மையில் தேவன் ஆட்சிசெய்கிறாரா என்று யோசிக்கும்போது, சோதனையைச் சகிக்கக்கூடிய அசையாத விசுவாசத்தை எவ்வாறு வளர்க்கமுடியும்? அதாவது, தேவனுடைய அன்பிலும் தயவிலும் வல்லமையிலும் நாம் கவனம் செலுத்தும்படிக்கு நம் சிந்தை முழுவதும் எதில் இருக்கவேண்டும்? தேவனையும் அவரது குணத்தையும் பற்றி சிலுவை சொல்லுவது என்ன?*

2. *ஞானத்திற்கும், உலகத்தில் காணப்படுகிற தீமைக்கான தீர்வுகளுக்கும் நாம் மனித ஏதுகரங்களைச் சார்ந்திராமல் (தலைவர்கள், நிறுவனங்கள், சமூக இயக்கங்கள்) தேவ வார்த்தையையும் நியாயத்தீர்ப்பையும் மட்டுமே முற்றிலும் சார்ந்திருப்பது ஏன் முக்கியம்?*

3. *பரிசுத்தஸ்தலம்தான் தேவனுடைய நியாயத்தீர்ப்பு நடைபெறுகிற இடம் என்பதிலுள்ள நடைமுறை கருத்துகள் என்ன?*

4. *சில சங்கீதங்களில் பயன்படுத்தப்படும் கடினமான வார்த்தைகளை எவ்வாறு புரிந்துகொள்ளலாம்? அவற்றை எழுதினவர்களின் மனித அனுபவங்களைப் புரிந்துகொள்ள அந்த வார்த்தைகள் எவ்வாறு உதவுகின்றன?*

சபைக்கு வர அழைப்பு: பகுதி 2

ஆண்ட்ரூ மெக்செஸ்னீ

பதினேழு வயதான செகுலே மேனிலைப் பள்ளியில் படித்து வந்த நிலையில் சத்தியத்தைப் பற்றி அறிய விரும்பினான். அதனால் வெவ்வேறு சபைகளுக்குச் சென்றான். ஆனால், அன்பான ஒரு தேவன் ஏன் ஒருவரை நித்தியக்காலமும் நரகத்தில் போட்டு எரிக்கவேண்டும் என்கிற கேள்விக்கு ஒருவர்கூட திருப்திகரமான பதிலைச் சொல்லவில்லை. எனவே, தானே உண்மையைக் கண்டுபிடிக்க நினைத்து, வேதாகமத்தை வாசிக்க ஆரம்பித்தான்.

போஸ்னா மற்றும் ஹெர்சிகோவினாவில் படித்து வந்தவன், மாண்டினிக்ரோவுக்குத் திரும்பினபோது, வேதாகமத்தில் தினமும் ஒரு புத்தகத்தை வாசித்து முடித்தான். முதல் நாளில், மத்தேயு சுவிசேஷத்தின் 28 அதிகாரங்களை வாசித்தான். பிறகு லூக்கா, யோவான், அப்போஸ்தலர், ரோமர் புத்தகங்களை வாசித்தான். தீத்து, பிலேமோன் போன்ற சிறு நிருபங்களாக இருந்தாலும், ஒரு நாளைக்கு ஒரு புத்தகத்தைத்தான் வாசிப்பான்.

புதிய ஏற்பாட்டை வாசித்தபோது, தேவனைப் பற்றி அவனுக்குள் சில கேள்விகள் எழுந்தன. ஆனால் அதிக தகவலைப் பெற விரும்பினான். பல ஆலயங்களுக்குச் சென்றான். ஆனால் செவந்த்–டே அட்வென்டிஸ்ட் ஆலயத்திற்குச் செல்லவில்லை. அட்வென்டிஸ்டுகள் ஒவ்வொரு வாரமும் 'இனிய ஓய்வுநாள்' என்று வாழ்த்திக் கொண்டு, பிறகு உடலுறவில் ஈடுபடுவார்களென யாரோ தவறாகச் சொல்லியிருந்தார்கள். அப்படிப்பட்ட பைத்தியக்காரர்களிடம் சத்தியம் எங்கு இருக்கப்போகிறது என்று யோசித்தான்.

பல ஆலயங்களுக்குச் சென்றும், சத்தியத்தை அறியமுடியாததால், தேவன் இருக்க வாய்ப்பில்லை என்கிற முடிவுக்கு வந்தான். வேதாகமத்தை வாசிப்பதை நிறுத்தினான்.

பிறகு, மேனிலைப்பள்ளி ஆசிரியர் ஒருவர் செகுலேவின் வேதாகமத்தைப் பார்த்தார். அவர் ஒரு அட்வென்டிஸ்ட்; விடுதியில் யாராவது மதுபானம் அல்லது போதை மருந்து ஒழித்து வைத்திருக்கிறார்களா என்று தேடியபோதுதான், செகுலேவிடம் வேதாகமம் இருந்ததை அவர் பார்த்தார்.

"வேதாகமம் வைத்திருக்கிறாயா!" என்று கேட்டார்.

"ஆமாம்" என்று சொன்னான்.

"அதிலிருந்து என்ன கற்றுக்கொண்டாய்?"

"பல விஷயங்களைக் கற்றுக்கொண்டேன்."

தானியேல் பற்றிக் கேட்டார். செகுலேவுக்கு ஞாபகசக்தி அதிகம்; மிகத்தெளிவாக பதில் சொன்னான்.

"உனக்குப் புரிந்திருக்கிறது. எனக்குத் தெரிந்து வேதாகமத்தை நன்றாகப் புரிந்த முதல் நபர் நீதான். நீ செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபைக்கு வர வேண்டும்" என்று ஆர்வத்தோடு சொன்னார்.

செகுலே மறுக்கவில்லை. அவர் தன்னுடைய ஆசிரியையல்லவா! போகாவிட்டால், தன்னை தேர்ச்சிப் பெறாமல் செய்துவிடுவார் என்று பயந்தான்.

"சரி, வருகிறேன்" என்று சொன்னான்.

ஆனால் பொய் சொன்னான். சபைக்குச் செல்லுகிற எண்ணம் அவனுக்கு இல்லை.